Scheduled Commercial Banks, Regional Rural Banks, Small Finance Banks, Cooperative Banks, Non-Banking Financial Companies, Micro-Finance Institutions and SHG Banks.

**What is the tenure of the Scheme?**

The Scheme shall be implemented up to March, 2022.

**What is the amount of initial working capital loan?**

The Initial working capital loan is upto `10,000/- for a tenure of one year.

**I have an Identity Card /Certificate of Vending. How can I apply for the loan?**

You can approach a Banking Correspondent (BC)/ Agent of Micro Finance Institution (MFI) in your area (ULBs will have the list of these persons). They will help you in filling up the application and upload the documents in a Mobile App/ Portal.

**How will I know that I am in the surveyed list?**

You can access this information on the website of Ministry of Housing and Urban Affairs.

**My name is in the list of surveyed vendors, but I do not have either Identity Card or Certificate of Vending? Can I avail the loan facility? If yes, what is the process ?**

Yes, you can still avail the Scheme benefits. A Provisional Certificate of Vending would be issued to vendors through an IT based Platform. The BC/ Agent will help you in filling up the application and upload the documents in a mobile App/ Portal.

**I am a vendor from the city but not included in the survey. How can I avail benefits of the Scheme?**

The Scheme is available to vendors of surrounding development/ peri-urban/ rural areas vending in the geographical limits of the cities/ towns and those left out of the survey. If you belong to this category you have to produce one of the following documents to obtain the Letter of Recommendation from ULB/TVC:
(i) Documents of past loan taken from a bank/ NBFC/ MFI for the purpose of vending; or
(ii) If you are a member of street vendors' association like NASVI, NHF, SEWA etc., your membership details; or
(iii) Any other documents to prove that you are a vendor; You can also request ULB through a simple application on white paper to conduct local enquiry to ascertain the genuineness of your claim. After receipt of LoR, you may approach BC/ Agent to apply for the loan.

**What is the rate and amount of interest subsidy?**

The rate of interest subsidy 7%. The interest subsidy amount will be credited directly in your account on quarterly basis. In case of early payment, the admissible amount of subsidy will be credited in one go. For a loan of Rs. 10,000, if you pay all the 12 EMIs in time, you will get approximately Rs. 400 as interest subsidy amount.

**Do I need to give any collateral to avail this loan?**

No collateral security is required.

**What is the amount of incentive for digital transactions?**

The on-boarded vendors would be provided with a monthly cashback in the range of Rs. 50 - Rs.100 as per the following criteria:
(i) On executing 50 eligible transactions: Rs. 50;
(ii) On executing the next 50 eligible transactions: Additional Rs. 25; and
(iii) On executing the next 100 eligible transactions: Additional Rs. 25.
Each transaction > Rs. 25 will be counted.

**I am not familiar with digital transactions. Will there be any capacity building for doing that?**

An agent from MFI / payment aggregator will approach you to onboard and help in conducting sample transactions. You will also be provided with a debit card and a QR code.

**Is there any incentive for timely/ early repayment of loan?**

Yes, on timely/ early repayment of loan of initial working capital, a vendor becomes eligible to avail a higher tranche of loan in next cycle.

**Is there any penalty for repayment of loan before the scheduled date?**

There is no penalty for pre-closure of the loan.

**How can I enhance my chances of availing this loan?**

You may become a part of Common Interest Group (CIG) formed by ULB or Joint Liability Group (JLG) formed by a lending institution.

**Who all can I approach to avail the facility?**

You may meet a member of SHG or ALF or CLF or call toll free number.

**Will I get Identity Card for use?**


Yes, you will be issued Provisional Identity Card on approval of loan and permanent CoV/ID will be issued within 30 days.

**How long it will take to get the loan approved?**

Complete process will be automated through a Mobile App and Web Portal. You will be able to check real time status of your application. Whole process, if paper/ information is complete, may take less than 30 days.

**What are the KYC documents required in addition to CoV/ ID / LoR?**

You may carry anyone of the following documents for KYC purpose:
(i) Aadhaar Card,
(ii) Voter's Identity Card,
(iii) Driving Licence,
(iv) MNREGA Card,
(v) PAN Card.



## சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட கடன்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மத்திய அரசு 21 லட்சம் கோடி ரூபாய் ஊக்கச் சலுகை திட்டத்தை அறிவித்துள்ளது. இதில் ரிசர்வ் வங்கி மார்ச் முதல் நிதிப் புழக்கத்தை அதிகரிக்க மேற்கொண்ட 8.60 லட்சம் கோடி ரூபாய் திட்டமும் அடங்கும்.

இந்நிலையில் ஊக்கச் சலுகை திட்டத்தில் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்ட 3 லட்சம் கோடி ரூபாய் கடன் பெறுவது தொடர்பான விபரத்தை தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது; கடந்த 2019-20ம் நிதியாண்டில் 100 கோடி ரூபாய் வரை விற்று முதல் கண்ட அனைத்து நிறுவனங்களும் ஊக்கச் சலுகை திட்டத்தில் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட கடன் பெறலாம். அந்நிறுவனங்கள் பிப். 29- வரை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் வாங்கிய கடன் 25 கோடி ரூபாய்க்குள் இருக்க வேண்டும். இது பிரதமரின் முத்ரா திட்டத்தில் கடன் பெற்ற நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட கடன் குறித்து குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு தகவல் அனுப்பப்படும். கடன் தேவையென்றால் விண்ணப்பிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

வங்கிகள் நிதி நிறுவனங்கள் வழங்கும் கடனுக்கு ஆண்டு வட்டி 9.25 சதவீதம், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் தரும் கடனுக்கு 14 சதவீதம் வட்டி வசூலிக்கப்படும். கடன் தவணை செலுத்த ஓராண்டு சலுகை அளிக்கப்படும். எனினும் சலுகை காலத்தில் வட்டி செலுத்தி வர வேண்டும். ஓராண்டுக்குப்பின் 36 மாதங்களுக்குள் கடனை திரும்பத் தர வேண்டும். முன்னதாகவே கடனை திரும்பத் தந்தால் அபராதம் வசூலிக்கப்படமாட்டாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஏற்கனவே கடன் பெற்ற குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு மட்டுமின்றி புதிதாக கடன் பெற விரும்பும் நிறுவனங்களுக்கும் ஊக்கச் சலுகை திட்டத்தின் கீழ் கடன் வழங்க வேண்டும் என இந்திய வர்த்தகர்கள் சங்கம் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

## தொழில் துவங்க அரசு 25 சதவீதம் மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பட தமிழக அரசு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தை(நீட்ஸ்) மாவட்ட தொழில் மையங்கள் மூலம் செயல்படுத்துகிறது.

மதுரையில் கலெக்டர் வினய் கூறியதாவது; பட்டம், பட்டயம், ஐ.டி.ஐ., தொழிற்கல்வி படித்த முதல் தலைமுறை தொழில் முனைவோர் இத்திட்டத்தில் தொழில்கள் துவங்கலாம்.

உற்பத்தி, சேவை சார்ந்த பொருளாதார ரீதியாக சாத்தியப்படும் ரூ. 10 லட்சம் முதல் ரூ. 5 கோடி வரையிலான தொழில்களுக்கு 25 சதவீதம் மானியம் அதிகபட்சமாக ரூ. 30 லட்சத்துடன் வங்கி கடன் வழங்கப்படும். தவணை தவறாமல் கடனை திருப்பி செலுத்துவோருக்கு கூடுதலாக 3 சதவீதம் பின்முனை வட்டி மானியம் வழங்கப்படும்.

பயனாளிகள் மூன்றாண்டுகளுக்கு குறையாமல் தமிழகத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். 2021 மார்ச் 31 வரை கடன் திட்ட பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் பயிற்சியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு 0452 253 621-ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## ஆதார் மூலம் உடனடி பான் எண் வசதி

மத்திய நிதி நிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, உடனடியாக நிரந்தரக் கணக்கு எண்ணை ஒதுக்கும் வசதியை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். ஆதார் எண்ணையும், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண்ணையும் வைத்திருக்கும் நிரந்தரக் கணக்கு எண் விண்ணப்பதாரர்களுக்கு இந்த வசதி தற்போது கிடைக்கும். காகிதமில்லா முறையில் செய்யப்படும் இந்த ஒதுக்கீடு மூலம், மின்னணு-நிரந்தரக் கணக்கு எண் விண்ணப்பதாரர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். ஆதார் சார்ந்த e-KYC என்கிற வாடிக்கையாளர் தகவல்களை அறிந்துகொள்ளும் முறை மூலம் உடனடி நிரந்தரக் கணக்கு எண் வசதி முறைப்படி தொடங்கப்பட்டுள்ளது.

ஆனால், இதன் மாதிரிப் பதிப்பு சோதனை முறையில் வருமான வரித்துறையின் மின் தாக்கல் இணையதளத்தில் 12.02.20 அன்று தொடங்கப்பட்டது. அன்று முதல், வெறும் 10 நிமிடங்களுக்குள்ளாக நிரந்தரக் கணக்கு எண்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 25.03.20 வரை 6,77,680 உடனடி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.



• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633
Prop.: B.S. Rajan


காய்ச்சல், இருமல், சளி, வறண்ட தொண்டை இருநாட்களுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகவும்.



https://www.youtube.com/watch?v=Ix1LDfy_AEE&feature=youtu.be

# கொரோனா பாதிப்பிலிருந்து தொழிலைக் காப்பாற்ற என்ன வழி?

ஊரடங்கு இருந்தாலும் பெரும்பான்மை கடைகள் திறந்தாகிவிட்டது. ஆனாலும், தொழில்கள் உடனே பழைய நிலைக்கு திரும்புமா என்பது சந்தேகம் தான். அப்படியே திரும்பினாலும் குறைந்தது சில ஆண்டுகள் ஆகலாம்.

கொரோனா வந்து தொழில்களின் தன்மையை. மக்களின் தேவையை மொத்தமாய் மாற்றிவிட்டது என்று சொல்லலாம். இனி புதிய விதிகளைப் புரிந்துகொண்டு தொழிலில் மாற்றங்கள் செய்பவர்கள் மட்டுமே செகண்ட் இன்னிங்ஸ் ஆட களத்தில் அனுமதிக்கப்படுவார்கள். அதெல்லாம் எதற்கு, பழையபடி ஷட்டரை திறந்து கல்லாவில் அமர்ந்து கரன்சியை எண்ணினால் போதும் என்று நினைப்பவர்களை பார்த்து கொரோனாவே பரிதாபப்படும். விற்கும் பொருளை, செய்யும் தொழிலை, விற்பனை உத்தியைமாற்றியமைக்க வேண்டியது இனி காலத்தின் கட்டாயம்.

கொரோனா, மக்களை கொஞ்ச நஞ்சம் பயமுறுத்தவில்லை. வாங்கும் பொருட்களில் கிருமி இருக்கிறதா என்று பூதக்கண்ணாடி கொண்டு பயத்தோடு பார்க்கும் அளவிற்கு பூச்சாண்டி காட்டியிருக்கிறது. எனவே பொருட்களை வழங்கும்போது முடிந்தவரை பாதுகாப்பானது நம்பிக்கையை வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கும் வகையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். அதனால் உங்கள் பொருட்களை கொரோனா ப்ரூஃப் ஆக்கும் வழியைத் தேடுங்கள். உதாரணமாக, 'பீட்டர் இங்கிலாண்ட்' தான் விற்கும் சட்டை துணியை துளசி மற்றும் வேப்ப இலையின் குணங்கள் கொண்டு தயாரிக்க முடியுமா என்று பார்க்கிறது. 'டோனியர்' தான் விற்கும் கோட் சூட்டை ஆண்டி-வைரல் வகையில் தயாரிக்க வழி தேடுகிறது. 'பாட்டா' ஆண்டி பாக்டீரியா ஷூ செய்யலாமா என்று யோசிக்கிறது. யார் கண்டது, இந்நேரம் உங்கள் போட்டியாளர்கள் தங்கள் பொருட்களை இது போல் பாதுகாப்பானதாக்கும் வழிகளைத் தேடிக்கொண்டிருக்கலாம். நீங்களும் தயாராகுங்கள்.

**செய்யும் தொழிலில் திருத்தங்கள்:** பல காலம் பார்க்காமல் இருந்து பார்க்கும் போது மனிதர்கள் முதல் மரங்கள் வரை மாறியிருப்பதைப் பார்க்கிறோம். செய்யும் தொழில் மட்டும் விதிவிலக்கா. தானாக மாறாவிட்டாலும் நீங்களாக மாற்ற வேண்டும். மாற்ற வேண்டியிருக்கும். தொழிலில் என்னென்ன மாற்றம் தேவை என்பதை சல்லடை போட்டு தேடுங்கள்.

சேலம் நகரிலுள்ள நாலெட்ஜ் பிசினஸ் ஸ்கூல் தங்கள் எம்.பி.ஏ மாணவர்களுக்கு ஆன்லைன் வீடியோ வகுப்புக்கள் நடத்தும் வகையில் தங்கள் பாடம் எடுக்கும் முறைகளை மாற்றயமைத்திருக்கிறது. ஹோம் ஒர்க் செய்யாத மாணவர்களை ஹோமிலிருந்தே ஒர்க் செய்ய வைத்திருக்கிறது! செய்யும் தொழிலை கொரோனா காலத்திற்கு ஏற்றார் போல் மாற்றுங்கள். உங்கள் தொழிலின் ஆயுள் கூடும்.

**மார்க்கெட்டிங்கில் புதுமை:** மார்க்கெட்டிங் என்றால் விளம்பரம் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், அதுமட்டுமல்ல. மார்க்கெட்டிங் என்பது வாடிக்கையாளரை அறிந்து அவர் தேவையை புரிந்து அதை மற்றவர்களைக் காட்டிலும் பெட்டராக தீர்த்து அதை சொல்லிக்காட்டிக் கொண்டே இருக்கும் செயல்பாடுகளின் கலவை. இது கொரோனா காலம், பாதி கடைகள் திறக்கவில்லை, மீதி கடைகளில் கூட்டமில்லை, இதில் எங்கிருந்து பொருளை விற்பது என்று சால்ஜாப்பு கூறினால் மொத்தமாய் தொழிலை மூடவேண்டியது தான். உங்கள் பொருளின் அவசியத்தை வாடிக்கையாளர் உணர என்ன செய்யலாம் என்று சிந்தியுங்கள். நெருக்கடி காலத்தில் உங்கள் பொருளுக்கு மக்கள் முன்னுரிமை தர என்ன செய்வது என்று யோசியுங்கள்.

கொரோனா வந்த பிறகுதான் பல ஆண்களுக்கு தங்கள் வீட்டில் சமையல் அறை எங்கிருக்கிறது, எப்படி இருக்கிறது என்றே தெரிந்திருக்கிறது. இன்று பலர் தாங்களே சமையல் செய்வது முதல் மனைவிக்கு உதவுவது வரை கிச்சனில் அதிக நேரம் செலவழிக்கிறார்கள். இதை தங்களுக்கு சாதகமாக்கும் வண்ணம் நாமக்கல் நகரைச் சேர்ந்த அர்பன் ஹோம்ஸ் என்ற ஃபர்னிச்சர் கடை வாட்ஸ் அப், ஃபேஸ்புக், ஈமெயில் மூலம் வாடிக்கையாளர்களிடம் **இப்பொழுது புரிகிறதா உங்கள் மனைவி சாதாரண கிச்சனை கட்டிக்கொண்டு எப்படி கஷ்டப்படுகிறார் என்று. அவளுக்கு நீங்கள் தாஜ் மஹால் கட்டித்தர வேண்டும், அட்லீஸ்ட் ஒரு அழகான மாடுலர் கிச்சன் ஆர்டர் செய்து தரலாமே. எங்களை அழையுங்கள். உங்கள் வீடு தேடி வந்து செய்து தருகிறோம்** என்று விளம்பரப்படுத்துகிறது. என்ன அழகான ஐடியா பாருங்கள்.

சமையல் அறையில் வேர்க்க விறுவிறுக்க மனைவிக்க உதவிவிட்டு வந்து அமரும் கணவன் வாட்ஸ் அப்பில் இந்த மெசேஜை படித்தால் அர்பன் ஹோம்ஸ் கடையை உடனே அழைப்பாரா மாட்டாரா. இவ்வகை மார்க்கெட்டிங்தான் இனி உங்கள் தொழிலுக்கு ஆக்சிஜன் தரும் வெண்டிலேட்டர் என்பதை உணருங்கள்!

உலகம் அழியப் போவதில்லை. ஆனால் நிறைய மாறப்போகிறது. தொழிலில் முழுமையான மாற்றம் செய்யும் முறைகளை முழு நேரமும் சிந்தியுங்கள். தொழில் தழைக்க அல்ல, இன்றைய சூழலில் பிழைத்திருக்கவே இது அவசியம். புரிந்தவர்கள் தொழிலுக்கு தடுப்பூசி தரப்படும். மாற மறுக்கும் தொழில்கள் சோஷியல் டிஸ்டன்சிங் செய்யப்படும்!

– தி இந்து (த)




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder • Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.



https://www.youtube.com/watch?v=Ix1LDfy_AEE&feature=youtu.be

# உத்யோக் ஆதார்

## *மீண்டும் ஒரு பார்வை*

நீங்கள் பெட்டிக்கடை வைத்திருப்பவராக இருந்தாலும் சரி, ஃபேக்டரி நடத்துபவராக இருந்தாலும் சரி... வியாபாரத்திற்கு ஆதார் கட்டாயமாக வாங்கி விடுங்கள்...

இதனால், அரசு அறிவிக்கும் நலத்திட்டங்கள் பெற, குறைந்த வட்டியில் மானிய கடன் பெற, வரிச்சலுகை, தவணைத் தொகை தவறும் பட்சத்தில் அதில் இருந்து பாதுகாப்பு பெற, சாலை போடுதல் போன்ற அரசு திட்டங்களுக்கு உங்கள் கடையோ, நிறுவனமோ பாதிக்கப்பட்டால் அதற்கான அதிகப்படியான நிவாரணம் பெற, முத்திரைத்தாள் கட்டணத்தில் 50% வரை சலுகை பெற, இது போல 20 விதமான நன்மைகள் பெறுவதற்கு உங்கள் கையில் இருக்க வேண்டிய முதல் ஆவணம் வியாபாரத்திற்கான ஆதார் எண்தான்.

நீங்கள் தொழில் செய்கிறீர்கள் என்பதற்கான ஆதாரமே வியாபாரத்திற்கான ஆதார் எண் தான்.

மளிகை கடை, முடிதிருத்தும் கடை, காய்கறி கடை, சில்லி கடை, லேத் பட்டறைகள், டெய்லர் கடை, ஹோட்டல், டீக்கடை, ஜெராக்ஸ் கடை என எந்த தொழில் செய்தாலும் வியாபாரத்திற்கான ஆதார் எண்ணை கட்டயாயமாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். உத்யோக் ஆதார் எடுத்தால் அதாவது நீங்கள் செய்யும் தொழிலை பதிவு செய்தால் ஜி.எஸ்.டி வரி கட்ட வேண்டும் என்பது முழுப்பொய்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் வருடத்திற்கு 40 லட்சம் வரை வியாபாரம் செய்பவர்கள் ஜி.எஸ்.டி. எண்ணோ அல்லது ஜி.எஸ்.டி வரியோ ஒரு ரூபாய் கூட கட்டத் தேவையில்லை என அறிவிப்பு வந்தள்ளது. உத்யோக் ஆதார் எடுக்கும்போது உங்கள் கடை அல்லது நிறுவனம் மத்திய அரசின் எம்.எஸ்.எம்.இ. பட்டியலில் தானாகவே இடம் பிடித்துவிடும் அதனால் அந்த துறைக்கு அரசு ஒதுக்கும் திட்டங்கள் மானியங்கள் வங்கி கடன்கள் போன்றவற்றை பெற முடியும்.

உத்யோக் ஆதார் எடுக்க தேவையான ஆவணங்கள்: ஆதார் கார்டு, பான் கார்டு, முன்பக்க வங்கி பாஸ்புக். ஆதாருடன் இணைக்கப்பட்ட மொபைல் எண் (ஆதாருடன் இணைக்கப்பட்ட மொபைல் கையில் இருந்தால் ஐந்து நிமிடத்தில் சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.)

*- J.S. Sayee Jeevan*

# கோவிட்-19 அவசரக் கடன்

## MSME- *களுக்கு மட்டுமல்ல*

## அனைத்து நிறுவனங்களுக்கும் தான்


*– மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்*



கோவிட் அவசரக் கடன் வசதி சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே அல்ல. அனைத்து நிறுவனங்களுக்கும் தான் என்று மத்திய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் கூறியுள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில் சங்கங்களின் கூட்டமைப்பின் FICCI தேசிய செயற்குழு உறுப்பினர்களிடையே பேசிய திருமதி. நிர்மலா சீதாராமன், இந்தியத் தொழில்களுக்கு ஊக்கமளிப்பதற்கும், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் அரசால் முடிந்த அனைத்து ஆதரவும் வழங்கப்படும் என உறுதியளித்தார். நிலுவைத் தொகைகளை செலுத்திவிடுமாறு அனைத்து அரசுத் துறையும் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்த திருமதி. நிர்மலா சீதாராமன், எந்தத் துறையிலாவது ஏதாவது பிரச்சினை இருந்தால் அரசு அதை கவனிக்கும் என்றார்.

புதிய முதலீடுகளுக்கு 15 சதவீதம் பெருநிறுவன வரி விகிதத்தைப் பெறுவதற்கான காலக்கெடுவை நீட்டிக்க அரசு பரிசீலிக்கும் என்றும் கூறினார். புதிய முதலீடுகளுக்கான 15 சதவீதம் பெருநிறுவன வரி விகிதத்தின் மூலம் தொழில்கள் பயனடைய வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம். 31.03.2023 என்னும் காலக்கெடுவை நீட்டிப்பதை பரிசீலிப்பதற்கான தங்கள் கோரிக்கையை நான் ஏற்கிறேன் என்று திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் கூறினார்.

பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) காலக்கொடுக்கள் பற்றிய தங்கள் பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு தொழில்துறையினரைக் கேட்டுக்கொண்ட அமைச்சர், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினார். மோசமாக பாதிக்கப்பட்டுள்ள துறைகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரியினை குறைப்பதற்கானத் தேவையைக் குறித்து பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரிக் குறைப்புப் பற்றி அதற்கான குழு தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், அந்தக் குழு வருவாயையும் எதிர்நோக்கியுள்ளது. எந்தத் துறையின் வரி விகிதத்தைக் குறைப்பதற்கான முடிவையும் குழு தான் எடுக்க முடியும். என்றார். பெரு நிறுவனங்களுக்கான வருமான வரி திரும்ப அளித்தல் தொடங்கிவிட்டதென்றும், ரூ. 35000 கோடி மதிப்பிலான வருமான வரி திரும்ப அளித்தல் சில வாரங்களில் நடைபெற்றதென்று நிதி மற்றும் வருவாய் செயலாளர் திரு. அஜய்பூஷன் பாண்டே அவர்கள் தெரிவித்தார்.


PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in

P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI


வெளியே செல்லும்போது மற்றவர்களிடம் இருந்து குறைந்தது 3 முதல் 6 தூரம் வரை தள்ளி இருப்பது நல்லது.

# சாம்பியன்ஸ் தளத்தின் விரிவான நோக்கம் மற்றும் அதன் கட்டமைப்புகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கடந்த 01.06.2020 அன்று சாம்பியன்ஸ் என்னும் தொழில்நுட்பத் தளத்தை தொடங்கி வைத்தார். உற்பத்தி மற்றும் தேசிய வலிமையை அதிகரிப்பதற்கான நவீன நடைமுறைகளைக் கொண்ட இணக்கமான செயலி மற்றும் உருவாக்கத்துக்கு இது தளமாக விளங்கும்.

பெயரைப் போலவே, சிறுதொழில் பிரிவுகள் தங்கள் குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்ளுதல், ஊக்குவித்தல், ஆதரவளித்தல், உதவுதல் மற்றும் கைதூக்கி விடுதல் ஆகியவற்றின் மூலம் அவற்றைப் பெரிய தொழில்களாக்கும் வகையிலான அடிப்படையை இந்தத் தளம் கொண்டிருக்கிறது.

சிறு, குறு, நடுத்தரத்தொழில் அமைச்சகத்தின் உண்மையான ஒற்றை நிலை இடமாக இது அமைந்துள்ளது. தகவல், தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த முறை, சிறு, குறு, நடுத்தரத்தொழில்களை தற்போதைய இடர்மிகு சூழ்நிலையிலிருந்து வெளிக்கொணர உதவுவதுடன், தேசிய, சர்வதேச அளவில் சாம்பியன்களாக மாற கைதூக்கி விடக் கூடியதாகும் ஆகும்.

**சாம்பியன்ஸ் தளத்தின் விரிவான நோக்கங்கள்:**

- **குறை தீர்ப்பு:** நிதி, மூலப்பொருட்கள், தொழிலாளர்கள், ஒழுங்குமுறை அனுமதிகள் உள்ளிட்ட சிறு, குறு, நடுத்தரத்தொழில்களின் பிரச்சினைகளுக்கு, குறிப்பாக கோவிட் தொற்றால் ஏற்பட்டுள்ள சிரமமான சூழ்நிலைக்குத் தீர்வு காண்பது.
- **புதிய வாய்ப்புகளைக் கைப்பற்ற அவர்களுக்கு உதவுதல்:** மருத்துவ உபகரணங்கள், பிபிஇ எனப்படும் தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள், முகக்கவசங்கள், போன்ற துணைப்பொருள்களை உற்பத்தி செய்வது மற்றும் அவற்றை தேசிய, சர்வதேச சந்தைகளில் விநியோகிப்பது.
- **திறமையை அடையாளம் கண்டு ஊக்குவித்தல்:** அதாவது, தற்போதைய சூழ்நிலையில் நிலைத்து நிற்க கூடிய, தேசிய, சர்வதேச சாம்பியன்களாக உருவெடுக்கக் கூடிய சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஆற்றலைக் கண்டறிதல்.

இது தொழில்நுட்ப ஆதரவுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை மற்றும் மேலாண்மைத் தகவல் முறையாகும். தொலைபேசி, இணையதளம், காணொளிக் காட்சி உள்ளிட்ட தகவல் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்களுடன், செயற்கை நுண்ணறிவு, தரவு ஆய்வு மற்றும் எந்திரநுட்பக் கற்றல் ஆகியவற்றை மேற்கொள்ளக் கூடிய முறையாகும்.

இந்திய அரசின் முக்கிய குறை தீர் தளமான சிபிகிராம்ஸ் மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் அமைச்சகத்தின் இதர இணையதளம் சார்ந்த வழிமுறைகளுடன் துல்லிய அடிப்படையில் இது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில் நுட்பக் கட்டமைப்பு முழுவதும் தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் எந்தவித செலவும் இன்றி உருவாக்கப்பட்டுள்ளது.

இதே போல, அமைச்சகத்தின் பொருள்கள் காப்பு அறை ஒன்று, மிகக்குறுகிய நேரத்தில் உள்கட்டமைப்பாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்த முறையின் பகுதி, ஆரக்கால்கள் மற்றும் மையப்பகுதி எனப்படும். ஹப் அன்ட் ஸ்போக்ஸ் மாதிரியில் கட்டமைக்கப்பட்டள்ளது. புதுதில்லியில் உள்ள சிறு, குறு, நடுத்தரத் தொழில் அமைச்சகத்தின் செயலர் அலுவலகத்தில் ஹப் எனப்படும் மையம் அமைந்துள்ளது. ஸ்போக்ஸ் எனப்படும் அமைப்புகள் மாநிலங்களின் பல்வேறு அலுவலகங்கள் மற்றும் சிறு, குறு, நடுத்தரத்தொழில் அமைச்சகத்தின் நிறுவனங்களில் செயல்படும்.

இதுவரை, 66 மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவை காணொளிக் காட்சி மூலம் இணைக்கப்பட்டுள்ளதுடன், சாம்பியன்ஸ் தளத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. விரிவான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.


Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல் பதிவுக்கு
## காகிதமில்லாத நடைமுறை அமல்




தொழில் நிறுவனங்கள் (உருவாக்கம் மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1951-ன் கீழ், தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல் பதிவு / தொழில் நிறுவனங்கள் உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், தொழில் நிறுவன உரிமையாளர் பதிவு வலைதளமான https://services.dipp.gov.in மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இந்த வலைதளம் மூலம், தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல்பதிவு - பகுதி - அ (வர்த்தகத்தை ஏற்படுத்துதல்) மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல்பதிவு - பகுதி - ஆ (வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்குவதை) ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் அளிக்கலாம்.

தொழில் நிறுவன உரிமையாளர்களின் தகவல்களை ஏற்றுக்கொண்டதற்கான சான்றிதழை காகிதத்தில் விநியோகிக்கப்படும். ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி, வலைதளத்தில் பதிவேற்றப்படும். தொழில் நிறுவன உரிமையாளர்களின் பதிவு செய்யப்பட்ட தகவல்களில் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டியிருந்தால், அதற்கான விண்ணப்பங்களை காகிதத்திலேயே அளிக்க வேண்டும். அதனை ஏற்றுக்கொண்டதற்கான சான்றிதழ்கள், காகிதமாக வழங்கப்படும். அதன் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி, வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அதன் பிறகு, ஏற்றுக்கொண்டதற்கான சான்றிதழ்கள், விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படும்.

வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில் செய்வதை எளிதாக்கும் வகையில், தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல்பதிவு வலைதளத்தை தொழில் ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை மேம்படுத்தியுள்ளது.

வலுப்படுத்தப்பட்ட வலைதளத்தில் தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல் பதிவு - பகுதி அ, பகுதி - ஆ மற்றம் திருத்தங்களைச் செய்வதற்கான விண்ணப்பங்கைள ஆன்லைன் மூலம் அளிக்கலாம்.

அனைத்து விண்ணப்பங்களும் காகிதமில்லாத முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, QR Code உடன் கூடிய ஏற்றுக்கொண்டதற்கான சான்றிதழ் மின்னணு முறையில் வெளியிடப்படும். இது அனுப்பப்பட்டது குறித்து விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் ஒரே நேரத்தில் அறிவிக்கப்படும்.

அதே நேரத்தில், குறிப்பிட்ட மாநில அரசுக்கும் மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும். இனிமேல், தொழில் நிறுவன உரிமையாளர்கள் தகவல் பதிவு - பகுதி - அ, பகுதி - ஆ மற்றும் திருத்தங்களைச் செய்வதற்கான விண்ணப்பங்களை நேரில் வழங்க வேண்டியதில்லை. காகிதத்தில் சான்றிதழ் எதுவும் விநியோகிக்கப்பட மாட்டாது. ஒதுக்கப்பட்ட QR Code மூலம் மின்னணு சான்றிதழ்களை ஆன்லைனில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.




கோழிக்கோடு தொழிலதிபர் திரு. K.R.M. **நிரஞ்சன் குமார்** அவர்கள் ரூ. 40 லட்சம் மதிப்புள்ள ஆட்டோமேட்டிக் முழு பரிசோதனை கருவியை ஸௌராஷ்ட்ரா மருத்துவமனை ஓம் சக்தி சேவா ஸ்கேன் சென்டர்-க்கு வழங்கினார். அருகில், டாக்டர் **கோகுல்நாத் பிரேம்சந்த்** தம்பதியர்ற்றும் (இடம்) திரு. T.K.D. **கிருஷ்ணன்** தம்பதியர் (வலம்)




சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

# ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# சுயசார்பு இந்தியா திட்டத்தின் பலன் – ஒரு உதாரணம்

தேசிய முடக்கத்தால் ஏற்பட்ட மந்தநிலையிலிருந்து இந்திய பொருளாதாரத்தை மீட்க ரூ. 20 லட்சம் கோடி மதிப்பிலான நிதியுதவி திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்தார். கடந்த மார்ச் மாதத்திலிருந்து 5வது முறையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் கூறுகையில், இந்திய பொருளாதாரத்தை மீட்கும் வழி சுயசார்பு இந்தியா – ஆத்மநிர்பார் பாரத் என்றார்.

தேவை, விநியோக சங்கிலி முதல் உற்பத்திவரை பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவையும் புதுப்பிக்க இந்த நிதித்திட்டம் உதவும் என்று பிரதமர் கூறினார். உள்நாட்டுத் தயாரிப்புகளை வாங்கவும், ஊக்குவிக்கவும் வேண்டும் என மக்களை பிரதமர் வலியுறுத்தினார். மக்கள் உள்நாட்டுத் தயாரிப்புக்கு குரல் கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் முடங்கியுள்ள வர்த்தக செயல்பாடுகளுக்கு தேவையான ஊக்கத்தை ஆத்ம நிர்பார் பாரத் திட்டம் மூலம் அளிக்க முடியும். இதற்கு மேக் இன் இந்தியா திட்டம் மூலம் உற்பத்தியை அதிகரிப்பது, குறைந்த தொழில்நுட்ப பொருட்களை பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு மாற்றாக, குறைந்த விலையில் கிடைக்கும் உள்நாட்டுத் தயாரிப்புகளை ஊக்குவிக்க வேண்டும்.

இதற்கு **உதாரணமாக**, பிபிஇ பாதுகாப்பு உடைகளை தயாரிக்க, திருப்பூரில் உள்ள மூன்று ஆடை நிறுவனங்கள், ஒரு பொறியியல் தொழில் நிறுவனத்துடன் இணைந்து புதிய வெப்ப விளிம்பு தையல் இயந்திரத்தை (Heat Seam Machine) உருவாக்கியுள்ளன. சுகாதார பணியாளர்களின் பாதுகாப்பு உடைகள், பனிச்சறுக்கு, மிதிவண்டி ஓட்டுதல், பாய்மரப் படகு போன்ற விளையாட்டுகளில் ஈடுபடும் வீரர்களின் உடைகள் தைக்கும் வகையில், இந்த உள்நாட்டு தயாரிப்பு இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த இயந்திரம் மேக் இன் இந்தியா திட்டத்துக்கு மிகச் சிறந்த உதாரணம்.

இதன் விலை ரூ. 1.5 லட்சம் மற்றும் ஜி.எஸ்.டி வரி. இதே வகை இயந்திரத்தை பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தால், அதன் விலை ரூ. 2.5 லட்சங்கள் முதல் 5 லட்சங்கள் வரை இருக்கும்.

இந்த வெப்ப விளிம்பு தையல் இயந்திரத்தைத் தயாரித்த நிறுவனத்தின் உரிமையாளர் பி. திருவாசகமணி கூறுகையில், பிபிஇ பாதுகாப்பு உடைகளைத் தயாரிப்பதற்கான வெப்ப விளிம்பு தையல் இயந்திரம் உள்நாட்டில் கிடைக்காததால், இதை இறக்குமதி செய்ய சீனா போன்ற நாடுகளை சார்ந்திருக்க வேண்டியிருந்தது. இந்த இயந்திரத்தின் விலையும் அதிகமாக இருந்தது. இதை திருப்பூர் கொண்டு வர நீண்ட காலமானது. அதனால் உள்நாட்டில் இந்த இயந்திரத்தைத் தயாரிக்க நினைத்தோம். தற்போது மருத்துவப் பாதுகாப்பு உடைகள் திருப்பூரில் அதிகளவு தயாரிக்கப்படுகின்றன. இதற்கு குறைந்த விலையில் கிடைக்கும் உள்நாட்டு வெப்ப விளிம்பு தையல் இயந்திரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

இந்த இயந்திரத்தை சமீபத்தில் தொடங்கி வைத்த ஏற்றுமதி கவுன்சில் தலைவர் ஏ. சக்திவேல் கூறுகையில், இது போன்ற உள்நாட்டு முயற்சிகள், மேக் இன் இந்தியா திட்டத்துக்கும், ஆத்ம நிர்பார் திட்டத்துக்கும் முதுகெலும்பை ஏற்படுத்தும் என்றார்.

கோவிட் நெருக்கடிக்கு இடையில், உற்பத்திப் பிரிவு முயற்சிகளால், இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்கள் முத்திரை பதிக்கின்றன. இது பிரதமரின் சுயசார்பு இந்தியா தொலை நோக்கை நிறைவேற்றும். மேலும், இது நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்.

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**


18 ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 171711500001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI


E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
18 ஆண்டு சேவை
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

# செயல் திறன் - வள்ளுவரின் பார்வையில்

சென்ற இதழின் தொடர்ச்சி...

– B.S. ஜெனார்த்தனன்





**மயங்கால் செய்:** இங்கும் ஒரு யானை நிற்கிறது. பக்கத்தில் ஒரு அழகிய பெண்ணும் நிற்கிறாள். ஏதோ ஒரு வேலையாகப் போகிற ஒருவன் இங்கு நின்று யானையின் முகத்தையும், அதன் தலையில் உள்ள இரு குமிழ்களையும் அதன்மேல் போர்த்தியிருக்கும் முகபடாம் என்ற சேலையையும், பக்கத்தில் நிற்கின்ற அழகிய பெண்ணையும், அவளது எடுப்பான நெஞ்சையம், அதன்மேல் அணிந்துள்ள சேலையையும் மாறிமாறிப் பார்க்கிறான். அவனுக்கு இந்த இரண்டும் ஒன்றுபோலவே தோன்றுகிறது. இறுதியில் அவன் கூறியது என்ன தெரியுமா? கொல்லும் குணமுடைய இந்த யானை என்னைக் கொல்லாது விட்டது; கொல்லாக் குணமுடைய இப்பெண், என்னைக் கொன்றுகொண்டே இருக்கிறாள் என்று. இந்த மயக்கம் அவன் மேற்கொண்ட செயலைச் செய்ய முடியாமல் இழக்கும்படி செய்துவிட்டது. ஆகவே, எதைச் செய்தாலும் இடையில் மயக்கத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

**கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்**
**படாஅ முலைமேல் துகில்**

- குறள்: 1087.

இது ஏழாவது யானைக்கான குறள்.

**கலங்காமல் செய்:** எந்த நல்ல காரியத்தையும் எவர் தொடங்கினாலும் அதற்குப் பல இடையூறுகள் வரும். சிலர் புண்படுத்துவர். சிலர் பின்னுக்கு இழுப்பர். சிலர் துன்பப்படுத்துவர். சிலர் குறை கூறுவர். சிலர் பழியும் கூறுவர். இன்னும் சிலர் தடுக்கவும் செய்வர். இவைகளையெல்லாம் கண்டு கலங்குபவர்களால் எச்செயலையும் செய்ய முடியாது. அவர்கள் செயல்திறனையே இழந்து விடுவர். ஒரு நல்ல செயலை மேற்கொண்டவர்கள் எத்தனை இடையூறு வந்தாலும் சிறிதும் கலங்காமல் கருமமே கண்ணாகக்கொண்டு அவற்றைச் செய்து முடிக்க வேண்டும் என்று வள்ளுவர் செயல்திறனுக்கு ஒரு இலக்கணம் கூறுகிறார். இதைக் கேட்ட நாம், இத்தனை இடையூறுகளுக்கு மத்தியில் இதை நம்மால் எப்படிச் செய்ய முடியும்? என்று வள்ளுவரையே கேட்கின்றோம். அவர் நம்மை அழைத்துக் கொண்டு யானைக் காட்டுக்கு சென்று ஒரு யானையைக் காட்டுகிறார். அவர் நம்மை அழைத்துக் கொண்டு யானைக் காட்டுக்கு சென்று ஒரு யானையைக் காட்டுகிறார். அதன் உடம்பை 20, 30 அம்புகள் துளைத்து இருக்கின்றன. சில அம்புகள் அதன் உடம்பிலேயே புதைந்தபடி காட்சியளிக்கின்றன. அம்புபட்ட இடங்களிலிருந்து குருதி கொட்டிக் கொண்டிருக்கிறது. அப்போதும அந்த யானை அழாமல் வருந்தாமல் சுருண்டு விழாமல் பீடு நடை நடந்து, தன் பெருமிதத்தை நிலைநிறுத்துகிறது பார் என்று வள்ளுவர் நம்மைத் தூண்டுகிறார். அப்போதுதான் நமக்கு, எத்தனை இடையூறு வந்தாலும் சிறிதும் கலங்காமல் நாம் மேற்கொண்ட காரியத்தைச் செய்யும் துணிவும் ஏற்படுகிறது.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்**
**பட்டுப் பாடூன்றும் களிறு**

- குறள்: 597.

உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும், யானை தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல், ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளரமாட்டார். இது எட்டாவது யானை.

- முற்றும்


வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
MADURAI NO.1 ENTERTAINMENT CHANNEL
24X7 LOCAL TV CHANNEL IN MADURAI
Get in on Google Play Store
Sourashtra Cable TV SCT
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34009
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD


தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டால் இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும்.

# சிந்திக்க சில விஷயங்கள்

எந்த ஒரு நோயும் ஒரே நாளில் ஒரே மருந்தில் குணமாவதில்லை. நோயின் தன்மை பொருத்தே காலமும் எடுத்துக்கொள்ளும். அது போலத்தான் நமது கலாச்சாரம், நடைமுறை, பழக்கவழக்கங்களை மறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இவை சரியாவதற்கும் பல ஆண்டுகள் எடுத்துக் கொண்டே தீரும்.

**மறந்த, மறைந்து விட்ட மற்றும் மறந்தும் போன சில நடைமுறை கலாச்சாரங்கள்:** நம் சமூகத்தில் ஒரு வீட்டில் திருமண நாளை முடிவு செய்து முகூர்த்த நேரம் குறித்துவிட்டால் அன்று முதல் திருமணம் வரை அந்த குடும்பத்தில் உள்ளவர்கள் சில நடைமுறை விதிகளை பின்பற்ற வேண்டும். நல்ல காரியங்களுக்கு மட்டும் செல்ல வேண்டும். தவிர்க்க முடியாத காரணத்தால் தெரிந்தவர் யாரேனும் ஒருவர் மறைந்து விட்டால் இடுகாட்டிற்கு எடுத்து செல்லும் போது இறந்தவரின் வீட்டிற்கு வெளியே இருந்து முகத்தைப் பார்த்துவிட்டு செல்வது தான் நமது பழக்கம். இன்றளவும் இதனை தவறாமல் நாம் கடைப்பிடிப்பதாகத் தெரிகிறது.

உணவுகளில் சில காய்கனிகள் சேர்க்கக்கூடாது என்ற நியதியும் அன்றிலிருந்தே நடைமுறைக்கு வந்துவிடுகிறது. காய் கனிகளுக்கே சில கட்டுப்பாடு இருக்கும் போது மாமிச உணவிற்கு அந்த கட்டுப்பாடு வைத்துள்ளோமா என்று கேட்டால் இல்லை... இல்லை... இல்லை... என்று தான் சொல்ல வேண்டும். இன்றைய சூழலில் மதுவும், மாமிசமும் இல்லா விருந்து விருந்தல்ல என்று மார்த்தட்டி கொண்டு சொல்லி பெருமை அடையும் இனமாக நம் சமூகம் மாறிவிட்டது.

வாழையடி வாழையாக நம் சந்ததிகளை உருவாக்குவதற்காக அக்னி சாட்சியாக ஹோமம் செய்து பெரியவர்களின் ஆசியோடு திருமணம் நடந்த முடிந்த மறுநாளே மதுவும், மாமிசத்தோடும் விருந்து வைத்து மனநிறைவு அடைபவர்களை பலரை பார்க்க முடிகிறது. இன்றைய காலகட்டத்தில் மாமிச விருந்து இல்லாமல் எந்த விசேஷமும் இருப்பதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல பிறந்த ஊரை விட்டு வெளியூர் அல்லது வெளிநாடு சென்றுவிட்டால் மாதம், கிழமை என்று எதுவும் பார்க்காமல் உண்ணும் உணவில் கவனம் செலுத்துவதில்லை.

நமது சமூகம் பிராமண சமூகம் என்பதையே தெரியாமல் பலர் வாழ்ந்தும் வருகின்றனர். ஆவணி அவிட்ட தினத்தில் பூணூல் போட்டுக்கொள்வது தான் நமது கலாச்சாரம். பலர் அதற்கு வருவதும் இல்லை. செல்பவர்களை ஏளனம் செய்பவர்களும் ஏராளம். ஒரு மனிதன் வாழும் காலங்களில் இருக்கும் சடங்குகளை விட அவர் மறைந்தபின் செய்ய வேண்டிய காரியங்கள் பற்பல. அதற்காகத் தான் நம் முன்னோர்கள் அக்கறையில் (இடுகாட்டில்) மண்டபத்தை ஏற்படுத்தி அதன் பின் செய்ய வேண்டிய காரியங்களுக்கு இக்கறையிலும் மண்டபம் கட்டி வைத்துள்ளார்கள். இது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

மறைந்தவர்களுக்கு மாதாமாதம், வருடாவருடம் செய்ய வேண்டிய காரியங்களை செய்வதில்லை, செய்ய மனமில்லை, செய்ய நேரமில்லை, செய்யும் சூழலை உருவாக்கிக் கொள்ள விரும்புவதும் இல்லை. இவை எல்லாம் நாம் முறையாக கடைபிடித்தால் நமக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது. மறந்த கலாச்சாரங்களால் நமக்கு என்ன தீமை அடைந்து விட்டோம். அப்படியே நடைமுறை கலாச்சாரங்களைக் கடைபிடிக்க ஆரம்பித்தால் என்ன நன்மை கிடைக்கப் போகிறது என்று பலர் கேட்பதை உணர முடிகிறது.

நம் கலாச்சாரப் பழக்கத்திற்கு நாம் தான் மாறவேண்டும். பிறகு அனைத்தும் தானாக மாற ஆரம்பிக்கும். உண்ணும் உணவைப் பொருத்தே நமது எண்ணமும் செயலும் இருக்கும். நல்லவர்களோடு பழகினால் நல்லவர்களாக மாறிவிடுவார்கள். இது வரலாற்று உண்மையென்றால் நல்ல உணவு உண்டால் நம் எண்ணமும் மலர்ந்து தானே ஆக வேண்டும். நம்மில் நல்ல எண்ணம் மலர்ந்துவிட்டால் பின் அனைத்தும் நல்ல வண்ணம் மாறும்.

**மாற்றத்திற்கு தேவை பணமல்ல... மாறவேண்டும் என்ற நல்ல மனம் மட்டுமே.**

– B.S. ஜெனார்த்தனன்


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical, Plumbing and Agri needs...



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



LAABH

SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 9344197952







LAABH

SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 9344197952



RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.06.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TÜV INDIA
TÜV NORD GROUP
An ISO 9001:2015 Certified Company

THE **CONSTRUCTIVE** COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

## Some of our Completed Projects






HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

---

VSOC
Institute for Trauma
Shoulder & Knee
Sports Injury
Arthroscopy
Joint Replacement

# VALE SPECIALTY ORTHO CLINIC
## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



**Dr. K.N. SUBRAMANIAN** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

---

# கைத்தறியில் ஓர் புதுமை
## Electronic Jacquard



**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm




**Applications :**
- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting


N.S. Rajan

## SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com


T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org